# அரவிந்த் மருத்துவமனையில் கண்ணே நலமா? கண்காட்சி

## கலெக்டர் துவக்கி வைத்தார்

மதுரை, அக். 9-

உலக கண்பார்வை தினத்தை முன்னிட்டு மதுரை அரவிந்த், கண் மருத்துவமனையில் இன்று கண்ணே நலமா? என்ற கண்விழிப்புணர்வு கண்காட்சியை கலெக்டர் அன்சுல்மிஸ்ரா தொடங்கி வைத்தார். அரவிந்த் கண் மருத்துவமனையின் தலைவர் டாக்டர் நம்பெருமாள்சாமி தலைமை வகித்தார். டாக்டர்கள் அரவிந்த், ஹரிப்ரியா, ஹிம், உஷா, கிருஷ்ணதாஸ் மற்றும் பலர் கலந்து கொண்டனர். கண் விழிப்புணர்வை அறிந்து கொள்ள 20 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. மாணவர்களுக்கு கண் பாதுகாப்பு குறித்த குறும்படம் முறையிடப்படுகிறது. வினாடி வினா உள்ளிட்ட போட்டிகளும் நடக்கிறது.

11ந் தேதி வரை நடக்கும் கண்காட்சியை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை மாணவ, மாணவியரும மாலை 4 மணி முதல் 7 மணி வரை பொதுமக்களும் பார்வையிடலாம்.

கண்காடசிக்கான ஏற்பாடுகளை அரவிந்த் கண் மருத்துவமனை சார்பில் சித்ரா, எஸ்.ஜி.ராமநாதன், சுனிதா, வேணி ஆகியோர் செய்துள்ளனர்.